**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, யூன்- 2015
# Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | புவியியல் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல் :-

- ❖ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.
- ❖ பகுதி I 30 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது.
- ❖ பகுதி I இற்கான விடைகள் இத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.

குறிப்பு :-

- ❖ பென்சிலால் எழுதப்படும் விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

## பகுதி I

❖ ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையினைத் தெரிவு செய்து, அதற்குரிய இலக்கத்தினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) தேசப்படமொன்றின் அடிப்படை இயல்புகளில் சட்டகத்திற்கு வெளியே அமைந்துள்ள விடயங்கள்
   1) இடத்தின் பெயர், குறியீடுகள், திசை, மூலம்
   2) அளவுத்திட்டம், சட்டகம், திசை, நிறங்கள்
   3) திசை, மூலம், தலைப்பு, அளவுத்திட்டம்
   4) திசை, தலைப்பு, மூலம், குறியீடு
   5) அளவுத்திட்டம், குறியீடு, நிறங்கள், திசை (.............)

2) செய்முறைப் புவியியலின் முனைப்பான பண்பாக அமைவது
   1) பல்வேறு தரவு மூலாதாரங்களைப் படமாக்குவது
   2) பௌதிக பண்பாட்டு அம்சங்களைக் காட்டுவது
   3) மனிதன் சூழல் இடைத்தொடர்பினைக் காட்டுவது
   4) காலம், இடம்சார் தோற்றப்பாடுகளை முன்வைப்பது
   5) படவரைகலை நுட்பங்களை வெளிக்கொணர்வது (.............)

3) ஒரு வருடத்தின் மழைவீழ்ச்சி, வெப்பநிலை தரவுகளை வரைந்துகாட்டப் பயன்படும் படவரைகலை நுட்பங்களாவன
   1) கோட்டுவரைபும், பல்கோட்டுவரைபும்
   2) நிரல் வரைபும், பல்நிரல் வரைபும்
   3) நிழற்றுப்படமும், புள்ளிப்படமும்
   4) கோட்டுப் படமும், சமகணியப்படமும்
   5) கோட்டு நிரல் வரைபடமும், மணிக்கூட்டு வரையமும் (.............)

4) 75, 71, 83, 79, 68, 74, 77, 81, 74 எனும் தரவுத்தொகுதியின் இடை, இடையம், ஆகாரம் என்பன முறையே

| | | |
|---|---|---|
| 1) 73.7, 77, 75 | 2) 72.7, 75, 77 | 3) 68.2, 79, 68 |
| 4) 75.7, 75, 74 | 5) 73.7, 74, 75 | (.............) |

5) தாழ்சமவுயரக்கோடுகள் நெருக்கமாகவும், உயர்சமவுயரக்கோடுகள் ஐதாகவும் அமைவதால் காட்டப்படும் சாய்வு

| | | |
|---|---|---|
| 1) மென்சாய்வு | 2) குவிவுச்சாய்வு | 3) குழிவுச்சாய்வு |
| 4) குத்துச்சாய்வு | 5) சரிவுச்சாய்வு | (.............) |

6) இலங்கையின் புத்தளம் பிரதேசத்தின் ஊடாகச் செல்லும் அகலக்கோடு

| | | |
|---|---|---|
| 1) $10^0$ வடக்கு | 2) $9^0$ வடக்கு | 3) $8^0$ வடக்கு |
| 4) $7^0$ வடக்கு | 5) $6^0$ வடக்கு | (.............) |

7) எந்தவொரு ஒழுங்கமைப்புக்கும் உட்படாத எண் பெறுமானத்தொகுதி எது?
1) ஈட்டு 2) மீடிறன் 3) பச்சைத்தரவு
4) ஆகாரம் 5) பத்தித்தரவு (.............)

8) பல்வேறு நதிகளினதும், கிளையாறுகளினதும் தலையருவியைப் பிரித்துவிடும் உயர் நிலத்தில் அமைந்த எல்லை
1) நீள்குன்று 2) மேட்டுநிலம் 3) நீர்ப்பிரிமேடு
4) சுவடு 5) கூம்புக்குன்று (.............)

9) புவியியல் தகவல் முறைமையில் பயன்படுத்தப்படும் வன்பொருள் ஒன்று பின்வருவனவற்றுள்
1) GRASS 2) ENVI 3) ILWIS
4) PLOTTER 5) Arc Info (.............)

10) புவியியல் அமைவிட முறைமையில் பயன்படுத்தப்படும் ராஸ்ரர் மாதிரியின் அனுகூலம் ஒன்று பின்வருவனவற்றுள்
1) முப்பரிமாண படங்களை அமைக்க ஏற்றது 2) இலகுவில் விளங்கிக்கொள்ளக் கூடியது
3) நெருக்கமாக அமைந்த தரவுக் கட்டமைப்பு 4) நுட்பமாக விளங்கப்படுத்தக்கூடியது
5) சேமிக்க இலகுவானது (.............)

11) புவியின் உட்கோளவகத்திற்கும் வெளிக்கோளவகத்திற்கும் இடையே காணப்படும் நிலைமாறு வலயம் அழைக்கப்படுவது
1) கூட்டன்பேர்க் இடைவெளி 2) மொஹோ இடைவெளி 3) லேமான் இடைவெளி
4) கொன்றாட் இடைவெளி 5) D படை (.............)

12) அடர்த்தி வேறுபாடு காரணமாகக் கீழிறங்கும் தகடுகளின் சாய்வான தளங்கள் அழைக்கப்படுவது
1) இறங்குவலயம் 2) அமுக்க வலயம் 3) காந்தவலயம்
4) குளோப் வலயம் 5) பெனியோ.்.ப் (.............)

13) உலகின் மிக நீண்ட உயிர்ப்புள்ள மாறுகுறையாக அமைவது
1) அலூசியன் குறை 2) ஸ்கோர்சியக்குறை 3) குறையில்குறை
4) சான் அன்ட்ரியாஸ் குறை 5) கிழக்காபிரிக்கப் பிளவுப்பள்ளத்தாக்கு (.............)

14) அண்மையில் நேபாளத்தில் பேரழிவுகளை ஏற்படுத்திய புவிநடுக்கத்திற்கு காரணமாக அமைந்த தகட்டசைவுச் சென்முறை
1) யுரேசிய, இந்தோ - அவுஸ்ரேலிய தகடுகளின் நிலைமாற்றம்
2) யுரேசிய, இந்தோ - அவுஸ்ரேலிய தகடுகளின் ஒருங்கல்
3) யுரேசிய, இந்தோ - அவுஸ்ரேலிய தகடுகளின் விலகல்
4) வங்காள, இந்திய தகடுகளின் உருவாக்கம்
5) வங்காள, இந்தியத் தகடுகளின் ஒருங்கல் (.............)

15) பின்வருவனவற்றுள் ஆழ்வானிலையால் அழிதல் (Deep weathering) செயன்முறை அதிகம் இடம்பெறும் பிரதேசங்களில் ஒன்று
1) இலையுதிர்க்காடுகள் 2) தைக்காக் காடுகள் 3) பற்றை மற்றும் முட்புதர்க்காடுகள்
4) அயனமழைக்காடுகள் 5) வெப்பப்பாலைவனப் பிரதேசங்கள் (.............)

16) மிகப்பெரிய பார்க்கன் குன்றுகள் (Barkhan Dunes) அழைக்கப்படுவது
1) லாஜோயா 2) நகரும் பார்க்கன்கள் 3) பஜாடா
4) இன்சல்பேர்க்குன்றுகள் 5) ஒக்காட்ஸ் (.............)

17) காலநிலை மாற்றத்தை விளக்குவதற்காக ‘காபன் 14’ முறையினை உருவாக்கியவர்
1) ஹரோல்ட் ஊறி (Harold C. Urey) 2) A. E. டக்ளஸ்
3) விலாட் லிபி (Willard Libby) 4) M. D. நியூசன் (M. D. Newson)
5) ஹவாட் கிறிட்ச்பீல்ட் (Howard J. Critchfield) (.............)

18) கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டின் ‘C’ அடையாளம் குறித்து நிற்பது
1) அயன மழைக்காட்டுக் காலநிலையினை ஆகும்.
2) அயன சவன்னாக் காலநிலையினை ஆகும்.
3) இளஞ்சூடான இடைவெப்ப வலயக் காலநிலையினை ஆகும்.
4) மத்திய தரைக் கடற் காலநிலையினை ஆகும்.
5) முனைவுக் காலநிலையினை ஆகும். (.............)

19) தன்னை நோக்கி வரும் நெட்டாலைக் கதிர்வீச்சின் பெரும் பகுதியை உறிஞ்சி, வளிமண்டலம் மீண்டும் புவிமேற்பரப்பிற்குத் திரும்பி அனுப்பும் செயன்முறை
1) வெப்பக்கதிர்வீசல் 2) மீள்கதிர்வீசல் 3) எதிர்க்கதிர்வீசல்
4) மின்காந்தக் கதிர்வீசல் 5) வெளிச் செல்லும் நெட்டலைக் கதிர்வீசல் (.............)

20) எவ்வடிப்படையில் மண்ணானது களி, மணல், வண்டல் என மூன்றாக வகைப்படுத்தப்படுகின்றது
1) இரசாயன அடிப்படையில் 2) கட்டமைப்பு அடிப்படையில் 3) இழையமைப்பு அடிப்படையில்
4) நிற அடிப்படையில் 5) நுண்பொருட்களின் அடிப்படையில் (.............)

21) குறிப்பிட்ட ஒரு நாட்டில் பிறப்பு விகிதம் மற்றும் இறப்பு விகிதத்துடன் குடிவரவு மற்றும் குடியகல்வு என்பன பூச்சியமட்டத்தில் காணப்பட்டால் அங்கு
1) நேரான சனத்தொகை அதிகரிப்பாகும் 2) மறையான சனத்தொகை அதிகரிப்பாகும்
3) சனத்தொகை வளர்ச்சி பூச்சியமாகும் 4) நேர்மறையான சனத்தொகை அதிகரிப்பாகும்
5) நாட்டின் கருவள உள்ளார்த்தம் தளம்பல் நிலையில் காணப்படுவதாகும் (.............)

22) பிலிப்பைன்ஸ், மலேசியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் தலைநகரங்கள் முறையே
1) ஜகார்த்தா, மணிலா, டாக்கா 2) மணிலா, கோலாலம்பூர், டாக்கா
3) மணிலா, பாங்கொங், டாக்கா 4) டாக்கா, மணிலா, கோலாலம்பூர்
5) கோலாலம்பூர், மணிலா, ஜகார்த்தா (.............)

23) ஆசியாவில் காணப்படும் ஓர் உயர்கைத்தொழில் பூங்கா
1) கொம்பினாட்ஸ் 2) இசிகா 3) சுக்குபா
4) டோக்கியோ 5) வாஜிமா (.............)

24) உலகிலுள்ள ஆதிவாசிகளில் உருவத்திலே குள்ள இனத்தவர்களாகக் காணப்படுபவர் யார்?
1) அபோறிஜினிஸ் 2) புலானிமக்கள் 3) புஸ்மன்கள்
4) பிக்மீஸ்கள் 5) எஸ்கிமோவர் (.............)

25) ஒரு நாட்டின் குடித்தொகை தொடர்ச்சியாக 1.4% ஆல் அதிகரிப்பின் அந்நாட்டின் குடித்தொகை இரட்டிப்படையும் காலம்
1) 35 ஆண்டுகள் 2) 50 ஆண்டுகள் 3) 70 ஆண்டுகள்
4) 100 ஆண்டுகள் 5) 140 ஆண்டுகள் (.............)

26) ஹெய்கின் (Keihin) என்ற கைத்தொழில் வலயம் உள்ளடக்கும் ஜப்பானிய பகுதிகள்
1) இசிகா - ஹரிமா – வாஜிமா 2) பவன்சு – புலைசி
3) கொன்சூ - கொக்கைடோ 4) கொம்பினாட்ஸ் - டோக்கியோ
5) டோக்கியோ – யொக்கஹாமா (.............)

27) கலப்பு விதைகள், பல்வேறுபட்ட கிருமிநாசினிகள், களைகொல்லிகள், இரசாயன உரவகைகள், சிறப்பான நீர்ப்பாசனம், முழுமையான இயந்திரப்பயன்பாடு, நல்லினவிதைகள், ஹோமோன்களை ஊசி மூலம் செலுத்தும்முறை, ஊசி மூலம் விரைவாக வளரச்செய்யும் முறை, ஒட்டுமுறை போன்றன மூலம் அதிக விளைவை எதிர்பார்க்கும் விவசாய முறை
1) மரபணு மாற்றுமுறை 2) பசுமைப்புரட்சிமுறை 3) சேதனப் பயிர்ச்செய்கை முறை
4) பிறப்புரிமையில் பொறியியல் 5) பிறப்புரிமைகல மேற்செருகல் (.............)

28) இலங்கையிலே வவுனியா, கொரவப் பொத்தானை, நிக்கரவட்டியா, மற்றும் தம்புள்ளை எனும் இடங்களை இணைக்கும் நாற்கோணப் பிரதேசத்தில் எவ்வகையான கனியப்படிவுகள் காணப்படுகின்றன
1) பொஸ்பேற்றுப்படிவு 2) இரும்புத்தாதுப்படிவு 3) காரீயப்படிவு
4) இல்மனைற் படிவு 5) மைக்காபடிவு (.............)

29) பின்வருவனவற்றுள் நாளாந்த நகர்வு குறைவாகக் காணப்படும் குடியிருப்பு எது?
1) கிராமிய - நகரக்குடியிருப்பு 2) கிராமியக்குடியிருப்பு 3) நகரக்குடியிருப்பு
4) சேரிப்புறக்குடியிருப்பு 5) வட்டவடிவக்குடியிருப்பு (.............)

30) இலங்கையிலிருந்த புகையிரதப் பாதைகளில் பின்வருவனவற்றுள் எப்புகையிரதப் பாதை இன்று நீக்கப்பட்டுள்ளது
1) ராகம – குருணாகல் 2) பாணந்துறை – மாத்தறை 3) அவிசாவளை – ஒப்பநாயக்கா
4) பேராதனை – நாவலப்பிட்டி 5) கொழும்பு – அவிசாவளை (.............)

(30 x 2 = 60 புள்ளி)

## பகுதி – II

❖ முதலாம் வினாவிற்கும் 2ம், 3ம் வினாக்களிலிருந்து ஒரு வினாவையும் தெரிந்தெடுத்து இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

❖ 1 : 50, 000 அளவுத்திட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி வழங்கப்படும்.

1) இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1 : 50 000 என்னும் அளவுத் திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. இப்படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i) படப்பிரதேசத்தில் காணப்படும் நீர் வடிகாலமைப்பு வகை எது? (2 புள்ளி)

ii) படப்பிரதேசத்தில் உள்ள இரண்டு நிர்வாக எல்லைகளைப் பெயரிடுக. (2 புள்ளி)

iii) இப்பிரதேசத்தில் இடம்பெறும் 4 பிரதான பயிர்ச்செய்கை நடவடிக்கைகளைப் பெயரிடுக. (2 புள்ளி)

iv) இப்பிரதேசத்தின் பிரதான சாய்வு பெரும்பாலும் எத்திசை நோக்கி உள்ளது? (2 புள்ளி)

v) படப்பிரதேசத்தில் காணப்படும் சமய, சமூக, நிர்வாகப் பணிகளுடன் தொடர்பான பண்பாட்டம்சங்கள் எட்டினைப் பெயரிடுக. (4 புள்ளி)

vi) படப்பிரதேசத்தில் உள்ள பிரதான வீதியின் நீளத்தினைக் கிலோமீற்றரில் தருக. (2 புள்ளி)

vii) இப்பிரதேசத்தில் மிக அதிகளவில் வாழும் மக்கள் இனத்தவர் யார்? (1 புள்ளி)

viii) இங்கு நெற்செய்கைப் பிரதேசங்கள் சிறியவையாகவும், சிதறியவையாகவும் உள்ளமைக்கான காரணம் யாது? (2 புள்ளி)

ix) இங்கு மேற்கொள்ளப்படும் சூழற்பாதிப்பை ஏற்படுத்தவல்ல பயிர்ச்செய்கை நடவடிக்கை எது? (1 புள்ளி)

x) படப்பிரதேசத்தில் உள்ள அதிகூடிய உயரமுள்ள திரிகோணகணித நிலையத்தின் பெயர் யாது? அதன் உயரம் எவ்வளவு? (2 புள்ளி)

2) i) புவியியற் தகவல் முறைமை என்பதற்கு வரைவிலக்கணம் தருக. (2 புள்ளி)

ii) அ) புவியியற் தகவல் முறைமையின் உள்ளடக்கங்களுள் தரவுகள் தவிர்ந்த ஏனையவற்றைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ஆ) ராஸ்ரர் மாதிரியின் (Raster model) குறைபாடுகள் 2 தருக. (4 புள்ளி)

iii) புவியியற் தகவல்முறைமை மூலமான படமொன்றில் காணப்பட வேண்டிய அம்சங்கள் 6 தருக. (6 புள்ளி)

iv) புவியியற் தகவல் முறைமையின் செயன்முறைகள் (Processes) மூன்றினை விவரிக்க. (6 புள்ளி)

**3)** 2012ல் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் தவிர்ந்த இலங்கையில் உள்ள 3 மாவட்டங்களின் குடித்தொகை அடர்த்தியினை அட்டவணை காட்டுகின்றது.

**மாவட்ட அடிப்படையிலான இலங்கையின் குடித்தொகை அடர்த்தி 2012**

| மாவட்டம் | அடர்த்தி | மாவட்டம் | அடர்த்தி |
|---|---|---|---|
| களுத்துறை | 772 | மட்டக்களப்பு | 201 |
| கண்டி | 715 | அம்பாறை | 153 |
| மாத்தளை | 247 | திருகோணமலை | 150 |
| நுவரெலியா | 414 | குருநாகல் | 348 |
| காலி | 655 | புத்தளம் | 264 |
| மாத்தறை | 637 | அனுராதபுரம் | 128 |
| அம்பாந்தோட்டை | 239 | பொலன்னறுவை | 131 |
| யாழ்ப்பாணம் | 628 | பதுளை | 287 |
| கிளிநொச்சி | 94 | மொனராகலை | 81 |
| மன்னார் | 53 | இரத்தினபுரி | 334 |
| வவுனியா | 92 | கேகாலை | 497 |
| முல்லைத்தீவு | 38 | | |

மூலம் :- இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2013

அ) அட்டவணையில் தரப்பட்டுள்ள தரவினைப் பயன்படுத்தி, இத்தரவு வரிசையினை இறங்கு வரிசையில் ஒழுங்குபடுத்துக.

(2 புள்ளி)

ஆ) அட்டவணையில் தரப்பட்டுள்ள தரவினைக்காட்டுவதற்கு பிரிக்கை வரைபு (Dispersion graph) ஒன்றினை அமைக்குக.

(6 புள்ளி)

இ) வரைபில் இடையம், கீழ்க்காலணை, மேற்காலணை என்பவற்றைக் குறித்துக்காட்டுக.

(3 புள்ளி)

ஈ) இடைக்காலணை வீச்சினைக் கணிக்குக.

(2 புள்ளி)

உ) பிரிக்கைவரைபு மற்றும் பகுதிகள் இ, ஈ ஆகியவற்றில் நீர் பெற்றுக்கொண்ட கணிப்பீடுகளின் அடிப்படையில் 2012ல் இலங்கையில் குடித்தொகை அடர்த்தியின் பிரதேச ரீதியான வேறுபாட்டுப் பாங்குகளை புள்ளிவிபர ரீதியாக விளக்குக. (7 புள்ளி)